# ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாய்க் கொண்டுள்ள (ஈ எஸ் எல்) மாணவர்கள் மற்றும் விக்டோறிய மாநில அத்தியாவசியக் கற்றல் தர நியமங்கள் (Standards)

## அறிமுகம்

விக்டோறிய மாநில அத்தியாவசியக் கற்றல் தர நியமங்கள் (வெல்ஸ் (VELS) அல்லது "தர நியமங்கள்" என்றும் அழைக்கப்படும்) தர நியமங்கள், விக்டோறிய மாநிலப் பாடசாலைகளில் ஆயத்த வருடம் (Prep) முதல் வருடம் 10 வரை கல்வி கற்கும் மாணவர்களின் எதிர்பார்க்கப்படும் மாநிலவாரியான தர நியமங்களை விவரிக்கின்றது. இவை மாணவர்களின் பாடசாலைக் காலத்தில் எவை கற்கவும் புரிந்து கொள்ளவும் அத்தியாவசியம் என்பதை விவரிக்கின்றது. தர நியமங்கள் பாடசாலைகளில் மாணவரின் கற்கையை திட்டமிடுதல், மாணவர் முன்னேற்றத்தை மதிப்பிடுதல், மற்றும் பெற்றோருக்கு அறிவித்தல் ஆகியவற்றுக்கு உபயோகிக்கப் படுகிறது.

### தர நியமங்கள் எப்படி ஒழுங்கு படுத்தப்பட்டிருக்கிறது?

விக்டோறிய மாநில அத்தியாவசியக் கற்றல் தர நியமங்கள் மூன்று பிரதானமான பிரிவுகள் அல்லது பகுதிகளாக வழங்கப்படுகிறது. அவையாவன:

- **உடல் சார்ந்த, ஆளுக்குரிய மற்றும் சமூகக் கற்கை:** சுகாதாரம் மற்றும் உடல் சார்ந்த கல்வி; ஒருவரோடு ஒருவர் உரையாடுதலை விருத்தி செய்தல்; ஆளுக்குரிய கல்வி; மற்றும் குடியியலும் பிரஜாவுரிமையும்
- **ஒழுக்கம்-சார்ந்த கல்வி:** ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம்; உயர் மனிதப் பண்புகள்; மொழிகள்; மற்றும் கலைகள்
- **ஒருவரோடு ஒருவருக்குரிய ஒழுக்கம் சார்ந்த கல்வி:** பாடத்திட்டப் பகுதிகள், தொடர்புகள்; வடிவமைப்பு, படைக்கும் திறனும் தொழில்நுட்பம்; தகவல் மற்றும் தொடர்பு சார்ந்த தொழில்நுட்பம்; சிந்தனை செய்யும் செயல்முறைகள் போன்றவற்றுக்குத் தொடர்புடைய வேறு அத்தியாவசியத் திறன்கள்.

இந்த அனைத்துப் பகுதிகளும் பாடசாலைகளில் வழக்கமாக கற்பித்து வந்துள்ளன எனினும் அவை மரபு சார்ந்த பாடப் பகுதிகளோடு எல்லா நேரங்களிலும் நெருக்கமாய் ஒன்றியிருந்ததில்லை. இவை இரண்டையும் ஒன்றிணைப்பது மாணவரது கல்வியில் இவற்றின் பெருமதிப்பையும், இயைபையும் வலியுறுத்திக் காட்டுகிறது.

### தர நியமங்கள் எப்படி வருட நிலைகளுக்குப் பொருந்துகிறது?

தர நியமங்களின் நிலைகள் பின்வரும் வகையில் வருட நிலைகளுக்கு தொடர்பு கொண்டுள்ளதாய் இருக்கிறது:

| விக்டோறிய மாநில அத்தியாவசியக் கற்றல் தர நியமங்களின் நிலைகள் | நிலை 1 | நிலை 2 | நிலை 3 | நிலை 4 | நிலை 5 | நிலை 6 |
|---|---|---|---|---|---|---|
| வருட நிலைகள் | ஆயத்த வகுப்பு வருட இறுதியில் | வருடம் 2 இறுதியில் | வருடம் 4 இறுதியில் | வருடம் 6 இறுதியில் | வருடம் 8 இறுதியில் | வருடம் 10 இறுதியில் |

### தர நியமங்கள் எப்படி அறிவிப்பதற்கு உபயோகிக்கப்படுகிறது?

பெற்றோரின் அறிக்கையில் மாணவனின் சாதனைகளுக்கு எதிராக அவற்றிற்குரிய தர நியமங்கள் காட்டப்பட்டிருக்கும். அறிக்கை அட்டையிலிலுள்ள ஏ முதல் ஈ வரையிலிலுள்ள நிரை எவ்வாறு உங்களது பிள்ளை எதிர்பார்க்கப்படும் தர நியமத்தை நோக்கி முன்னேறுகிறார் என்பதைக் கூறும்.

அறிவிக்கும் நிரை:

ஏ– இந்த வருடப் பகுதியில் எதிர்பார்க்கப்பட்ட தர நியமத்திற்கு வெகு கூடுதலாக
ப– இந்த வருடப் பகுதியில் எதிர்பார்க்கப்பட்ட தர நியமத்திற்கு கூடுதலாக
சி– இந்த வருடப் பகுதியில் எதிர்பார்க்கப்பட்ட தர நியமத்திற்குரிய
டி– இந்த வருடப் பகுதியில் எதிர்பார்க்கப்பட்ட தர நியமத்திற்கு கீழ்
ஈ– இந்த வருடப் பகுதியில் எதிர்பார்க்கப்பட்ட தர நியமத்திற்கு வெகு குறைவாக.

## ஆங்கிலத்தை இரண்டாவது மொழியாகக் கொண்டுள்ள மாணவர்களும் தர நியமங்களும்

ஈ எஸ் எல் மாணவர்களுக்கு அவர்களது முதல் மொழியில் அறிவும், திறன்களும் ஏற்கனவே இருந்தாலும் தெரிந்தவற்றை முற்றாகப் பிரயோகிப்பதற்கும், தொடர்ந்து அவுஸ்திரேலியப் பாடசாலைகளில் கல்வி கற்பதற்க்கும், அவர்கள் ஆங்கிலம் கற்க வேண்டும். அவர்கள் போதிய அளவு ஆங்கிலம் கற்குமட்டும் அவர்கள் எல்லாத் தர நியமங்களுக்கும் குறிப்பாக ஆங்கில தர நியமங்களுக்கு பொருத்தமாக மதிப்பீடு செய்யப்பட இயலாது.

ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாய்க் கொண்டுள்ள மாணவர்கள் தமது ஆங்கிலக் கல்வியில் எவ்வாறு முன்னேறுகின்றனர் என்பதைக் காட்ட "ஆங்கிலத் தர நியமங்க"ளுக்குப் (English Standards) பதிலாக "விக்டோறிய மாநில அத்தியாவசியக் கற்றல் தர நியமங்களுக்கான இரண்டாம் மொழியாக ஆங்கில"த் துணைவன்" {The ESL Companion to the Victorian Essential Learning Standards (The ESL Standards)} பயன்படுத்தப்படுகிறது. மாணவனனின் கற்கையை மதிப்பீடு செய்யவும் மாணவனனின் கல்வியின் முன்னேற்றத்தை அறிவிக்கவும் ஆங்கில தர நியமங்களுக்குப் பதிலாக ஈ எஸ் எல் தர நியமங்கள் உபயோகிக்க முடியும்.

ஈ எஸ் எல் தர நியமங்கள் ஈ எஸ் எல் மாணவர்களின் முன்னேற்றத்தை காட்டும் முகமாக பின்வரும் வகையில் ஒழுங்குபடுத்தப் பட்டுள்ளது:

| | | | | |
|---|---|---|---|---|
| ஏ படிநிலைகள் | வருடங்கள் | ஆயத்த முதல் 2 வரை | 2 படிநிலைகள் | ஏ1 மற்றும் ஏ2 |
| பி படிநிலைகள் | வருடங்கள் | 3 முதல் 6 வரை | 3 படிநிலைகள் | பி1, பி2, பி3 |
| எஸ் படிநிலைகள் | வருடங்கள் | 7 முதல் 10 வரை | 4 படிநிலைகள் | எஸ்1, எஸ்2, மற்றும் எஸ்4 |

மாணவர்கள் அவர்களது முதல் மொழியில் பலமான எழுத்தறிவுத் திறன்கள் இருக்காவிட்டால் அவர்கள் ஆங்கிலத்தை படிநிலைகள் பி எல் அல்லது எஸ் எல் இல் கற்கத் தொடங்குவார்கள்.

படிநிலைகள் கீழே உள்ள படத்தில் காட்டப்பட்டிருக்கிறது.




இந்தப் படம் ஈ எஸ் எல் மாணவர்கள் ஆங்கில தர நியமங்களுக்குரிய நிலைகளுக்கு மாறுமுன் எவ்வாறு ஈ எஸ் எல் படிநிலைகள் மூலம் முன்னேறுகிறார்கள் என்பவற்றையும் காட்டுகிறது.

சில காலத்தின் பின் மாணவர்கள் அவர்களது ஆங்கில மொழித் திறன்கள் அவர்களது எதிர்பார்க்கப்படும் ஆங்கில தர நியமங்கள் நிலைக்கு (ஏ2, பி3, அல்லது எஸ்4 படிநிலையின் பின்) பொருந்தத் தொடங்கும் கட்டத்தை எய்துவார்கள். இந்தச் சமயத்தில் உங்களது பிள்ளையின் ஆசிரியர் பிள்ளையின் முன்னேற்றத்தை ஆங்கில தர நியமங்களை உபயோகித்து அறிவிக்கத் தொடங்குவார். உங்களது பிள்ளை இந்தக் கட்டத்தை அடையும் காலம் அவர்களது வயது, அவர் முன்பு பெற்றிருந்த கல்வி, மற்றும் அவர் அவுஸ்திரேலியாவிற்கு வருமுன் அவர் பெற்றிருந்த ஆங்கில அறிவு ஆகியவற்றில் தங்கி இருக்கிறது.

## எனது பிள்ளையின் ஈ எஸ் எல் அறிக்கை எப்படி காட்சியளிக்கும்?

உங்களது பிள்ளையின் ஈ எஸ் எல் அறிக்கை அவர் எந்த ஈ எஸ் எல் படிநிலையில் பயிற்சி பெறுகிறார் என்பதைப் பற்றிய தகவலைத் தரும்.

உங்களது பிள்ளையின் ஆசிரியர் உங்களது பிள்ளையின் முன்னேற்றத்தைப் பற்றி கூடுதலான தகவல்களை பெற்றோர் ஆசிரியர் கூட்டங்கள் மூலம் கொடுக்க முடியும். இந்தக் கூட்டங்களில் பின்வரும் கருமங்களும் கலந்தாலோசிக்கப்படும்: உங்களது பிள்ளை செய்யும் கருமங்களைப் பற்றிய கலந்தாலோசனை, உங்களது பிள்ளை கற்கை மூலம் எய்திய சாதனை, எவற்றில் அவர்கள் முன்னேற வேண்டும், வருங்காலத்தில் உங்களது பிள்ளை கற்பதற்கு உதவி செய்ய பாடசாலை எவற்றை செய்வதற்கு உத்தேசிக்கிறது, மற்றும் உங்கள் பிள்ளை கற்பதற்கு உதவி செய்ய நீங்கள் வீட்டில் என்ன செய்ய முடியும்.

## எனது பிள்ளையின் ஆங்கிலமற்ற வேறு கல்விப் பகுதிகளின் அறிக்கை எவ்வாறு காட்சியளிக்கும்?

உங்களது பிள்ளையின் ஆங்கிலமற்ற வேறு கல்விப் பகுதிகளின் முன்னேற்றம், பொருத்தமாயிருந்தால் முன்பு விவரித்த ஏ தொடக்கம் ஈ நிரைகளை உபயோகித்து அறிவிக்கப்படும்.

உங்களது பிள்ளையின் ஆசிரியர் முன்னேற்றத்தை அறிவிக்கும் போது உங்களது பிள்ளை இன்னும் ஆங்கிலம் கற்கிறார் என்பதைக் கருத்தில் கொள்வார். ஆங்கிலத்திற்கு புதிதாய் இருக்கும் மாணவர்கள் அவர்கள் கற்றதை அல்லது புரிந்து கொண்டதை வெளிப்படுத்த அநேகமாக கஷ்டப்படுவார்கள் என்பதை ஆசிரியர்கள் அறிவார்கள். இந்தக் காரணத்திற்காக ஆசிரியர்கள் மட்டுப்படுத்தப்பட்ட ஆங்கில மொழித் திறன்கள் இருக்கும் மாணவர்களானாலும் சரி ஈ எஸ் எல் மாணவர்கள் அவர்களது அறிவை வெளிப்படுத்த அனுமதிக்கும் பல் வேறுபட்ட மதிப்பீட்டு நடவடிக்கைகளை உபயோகிப்பார்கள்.

## மேலதிகத் தகவல்

நீங்கள் வெல்ஸ் (VELS) ஆவணங்களை ஆங்கிலத்தில் வாசிக்க முடியும் http://vels.vcaa.vic.edu.au/essential

வெல்ஸ் பற்றிய பொதுப் பிரசுரிப்புகளை ஆங்கிலமல்லாத 14 வேறு மொழிகளில் பார்க்கவும் http://vels.vcaa.vic.edu.au/links/general.html

நீங்கள் புதிய மாணவர் அறிக்கை அட்டைகளைப் பற்றி ஆங்கிலம் அல்லாத சில மொழிகளில் வாசிக்கலாம் http://www.sofweb.vic.edu.au/studentreports/about.htm#communitylanguages

விக்டோறிய மாநில அரசாங்க பாடசாலைகளில் ஈ எஸ் எல் திட்டங்களைப் பற்றிய கூடுதலான தகவல் http://www.sofweb.vic.edu.au/lem/esl

பாடசாலை எப்படி விக்டோறிய மாநில அத்தியாவசியக் கற்றல் தர நியமங்கள் மூலம் கற்பிக்கிறது மற்றும் மதிப்பீடு செய்கிறது என்பதை அறிய உங்களது பாடசாலையைத் தொடர்பு கொள்ளவும்.

வேறு மொழிகளில் இந்தச் சிற்றேட்டின் பிரதிகளுக்கு http://www.sofweb.vic.edu.au/lem/esl/einter.htm